செ.வெ.எண்.323 நாள்.10.07.2017

# காஞ்சிபுரத்தில் உலக இளைஞர் திறன் நாளை முன்னிட்டு திறன் நாடுவோருக்கான பயிற்சிக்கான பதிவுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

************

தமிழ்நாடு அரசு ஜீலை 15 உலக இளைஞர் திறன் நாளை முன்னிட்டு ஜீலை 10 முதல் ஜீலை 15 வரை ஒரு வார காலத்தை திறன் வாரமாக அறிவித்து வேலை நாடுநர்கள்,பள்ளி கல்லூரி மாணவர்களுக்கு திறன் மேம்பாடு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

காஞ்சிபுரத்தில் 10.07.2017 அன்று அனைத்து வட்டாட்சியர் அலுவலகங்கள் ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் மாவட்ட ஆட்சியத்தலைவர் அலுவலகத்தில் இலவச திறன் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவை பதிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்புகை ரசீதும் வழங்கப்பட்டது. காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் திறன் பயிற்சிக்கான பதிவுகளை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்.

மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்களாலும், ஐடிஐ சார்ந்த பயிற்றுநர்களாலும், திறன் நாடுவோர் பயிற்சிக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு பதிவுகள் மேற்கொள்ளப்பட்டன. மாவட்டம் முழுவதும் 534 நபர்கள் பயிற்சிக்காக தங்களை பதிவு செய்துள்ளனர்.

ஜூலை 11ம் நாளன்று மாவட்டத்தில் உள்ள பள்ளி கல்லூரிகளில் திறன் மேம்பாடு குறித்த விழிப்புணர்ச்சி ஏற்படுத்தப்படும் வகையில் நிகழ்ச்சிகள் நடைப்பெற உள்ளன.

ஜூலை 12ம் நாளன்று பெண்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகள் கல்லூரிகள்/ மேல்நிலைப்பள்ளிகளில் திறன் மேம்பாடு குறித்து விழிப்புணர்வும் ஏற்படுத்தப்படஉள்ளது.

ஜூலை 13 நாளன்று **ஐடிஐ** படிக்கும் மாணவ/மாணவரிடையே திறன் மேம்பாடு குறித்த சிறப்பு விழிப்புணர்வு மற்றும் பணியமர்த்தும் முகாம் நடைபெறவுள்ளது.

ஜூலை 14ம் நாளன்று மாற்றுத்திறனாளிகளுக்கென்று சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் திறன் பதிவு நடத்தப்பட உள்ளது.

ஜூலை 15ம் நாளன்று திறன் வாரமாக ஜூலை 10 முதல் 14 வரை நடைபெற்ற நிகழ்ச்சிகளின் தொகுப்பாக மாவட்ட ஆட்சியரால் ‘**திறன் தினம்**’ கொண்டாடப்பட்டு திறன் விழிப்புணர்வு பேரணியும் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.க.சௌரிராஜன், சார் ஆட்சியர் திரு.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., மாவட்ட வேலைவாய்ப்பு துணை இயக்குநர் திரு.அருணகிரி ஆகியோர் பங்கேற்றனர்.

செய்தி வெளியீடு,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.